**ஹற்றன் - நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2018**

ஹற்றன் - நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திற்குமிடையேயான 2010 நவம்பர் 02 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ – 20 கடன் உடன்படிக்கையுடனும் 2015 யூன் 22 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ – 26 ஆம் இலக்க குறைநிரப்பு கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்பிரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஹற்றன் தொடக்கம் நுவரெலியா மாவட்டத்தில் வாழும் மக்களின் சந்தைக்கான அணுகுமுறையை முன்னேற்றமடையச் செய்வதன் மூலமும் வேலை வாய்ப்பையும் சமூக சேவைகளையும் ஏற்படுத்துதல் மூலமும் தென் மாகாணத்தில் சமூக, பொருளாதார வளர்ச்சியை தூண்டச் செய்து அபிவிருத்திக்கான சமச்சீரான தன்மையை உருவாக்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆகையால், ஹற்றன் தொடக்கம் நுவரெலியா வரை 35.6 கிலோமீற்றரை முன்னேற்றவும் புகையிரத கடவைப் பாலத்தின் கீழ் கொட்டகல கால்வாய் மற்றும் நானுஓயா நிர்மாண வேலையை நடாத்தவும் திட்டமிடப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,061 மில்லியனுக்குச் சமமான ஐ.அ. டொலர் 70.40 மில்லியனாகும். இதில் ரூபா 7,049.37 மில்லியனுக்குச் சமமான ஐ.அ. டொலர் 57.14 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 01 இல் செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் அதனைப் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, ஹொட்டகல கால்வாய் மற்றும் நானுஓயா சுரங்கம் போன்றவற்றின் மேலதிக வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகளின் மீதான விலைத்தளம்பல்கள், கிரயங்களை ஈடுசெய்வதற்கு ரூபா 2,010.2 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர்கள் 17 மில்லியன் குறைநிரப்புக் கடனை பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் மேலதிக ஒதுக்கீடொன்றினை வழங்கியிருந்தது. மேலும் குறைநிரப்புக் கடனின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீட்ன் மீதான சேமிப்பு அவிசாவல - ஹட்டன் வீதியின் 68.5 கிலோமீற்றர் தொடக்கம் 72 கிலோமீற்றர் வரையான பகுதியினை முன்னேற்றுவதற்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டக்காலப்பகுதியானது செயற்திட்டத்தின் கீழான வேலைப்பரப்பின் மாற்றம் காரணமாக 2016 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது

சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஹட்டன் - நுவரெலிய வீதியின் வீதி புனரமைப்பு வேலைகள் மற்றும் கொட்டகல சுரங்கப்பாதை, நானுஓயா கீழ்வழிப்பாதை மற்றும் ஹட்டன் - அவிஸ்ஸாவல வீதி மீதான 68.5 கிலோமீற்றர் தொடக்கம் 72 கிலோமீற்றர்களின் வீதிப்பகுதி உள்ளடங்களான செயற்திட்டத்தின் ஏனைய | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினை பராமரிக்க மேலதிக கிரயம் மற்றும் நேரம் செலவிடப்பட்டிருந்தன. | வீதி நிர்மான நடவடிக்கைகள் பூர்த்தியாகியிருப்பினும், ஹட்டன் - நுவரெலிய வீதி முன்னேற்ற செயற்திட்டத்திற்கு இன்னும் காணி சுவீகரிப்பு கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. ஆகவே, | அமுல்படுத்தல் முகவரினால் செயற்திட்டத்தின் சொத்துக்கள் பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளவும் காணி சுவீகரிப்பு மீதான தீர்க்கப்படாத விடயங்களை தீர்க்கவும் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| முன்னேற்ற வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இருப்பினும், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் செயற்பாடுகளை மூடவும் அதனுடன் தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவும் அமுல்படுத்தல் முகவரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | செயற்திட்டத்திற்கான முடிவுறுத்தல் கணக்குகள் உரிய திகதி வரை தயாரிக்கப்படவில்லை. | எடுக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| காணி சுவீகரிப்பு செயற்பாடானது 2011 இல் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், மொத்தமாக ரூபா 31 மில்லியன் இழப்பீட்டு கொடுப்பனவுகள் 677 அரச காணிகள் உள்ளடங்களாக சுவீகரிக்க பட்டியலிடப்பட்டிருந்த 2,501 காணித்துண்டுகளில் 703 காணித்துண்டுகளிற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, 32 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கான இழப்பீட்டு கொடுப்பனவினை தீர்ப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக மொத்தமாக ரூபா 1.0 மில்லியன் வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் காரணமாக, இழப்பீடுகள் மீதான வட்டி கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | இழப்பீடுகளை கொடுத்து தீர்க்கவும் அதன் மீதான மேலதிக கிரயங்களை தவிர்க்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |